1971 அக்டோபர் 23]

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சிகளுக்குச் செல்லுமுன் இந்தப் பேரவைக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். பொதுவாக சட்டப் பேரவையின் விதி முறைகள், உரிமைகள் எல்லாம் காக்கப்படுகின்றன. அதுவும் தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் எந்த அளவிற்கு உரிமைகள் இருக்கின்றன, காக்கப்படுகின்றன என்பதை சற்று நேரத்திற்கு முன்னல் ஒற்றிவைப்புத் தீர்மானங்களின் மீது நடந்த விவாதம் தெரியப்படுத்தும். அவை அவ்வளவும் விதி முறைகளுக்கு உட்பட்டவை அல்ல என்பது பேரவைத் தலைவருக்குத் தெரியாதது அல்ல, அரசுக்கும் தெரியாதது அல்ல. இருப்பினும் அவர்களது எண்ணங்களை, கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக மிகத் தாராளமாக நடந்து கொள்கிற இந்தச் சட்டமன்றத்தில் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டவேண்டும் என்பதற்காக, அடிக்கடி வாக்-அவுட் செய்யப்படுகின்றது. அதை அரசாங்கத்தின் மீதுள்ள குறை என்று நான் கருத மாட்டேன், சட்டப் பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இங்கு பல கட்சிகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு முகாந்திரத்தைக் காட்டி வெளிநடப்பு செய்வது என்பது சட்ட மன்ற உரிமைகளுக்குக் கட்டுப்பட்டதா என்பதைப் பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் இப்போது கூட அல்ல, பொதுவாக அதுபற்றிய ஒரு முடிவிற்கு வந்தால் வெளி உலகத்திற்கு நல்லதாக அமையும் என்ற என் கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) உறுப்பினர்கள் தாங்கள் கொடுக்கும் தீர்மானங்களை விளக்க வாய்ப்பு கோருதல்.

Dr. H. V. HANDE: I want to make a suggestion to the House and the Government. So many times we give notices of adjournment motions and call attention motions and we do not criticise the Hon. Speaker for rejecting them because we cannot criticise him, and we are so helpless in the matter. For instance, I have given notice of five motions but they have all been rejected.